தினத் தந்தி



**தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில்**
**23 டாக்டர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**
**டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத் வழங்கினார்**

சென்னை, ஜூலை.2–

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில் நரம்பியல் நிபுணர் டாக்டர் கே.சீனிவாசன் உள்பட 23 டாக்டர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டது. விருதுகளை சங்கர நேத்ராலயா தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத் வழங்கினார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது

சென்னையில் நேற்று டாக்டர்கள் தினவிழா பல இடங்களில் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர்கள் தினவிழா மற்றும் பல்கலைக்கழக தினவிழா கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் மயில்வாகனன் நடராஜன் தலைமை தாங்கினார். பதிவாளர் டாக்டர் சுதாசேஷய்யன் வரவேற்றார்.

விழாவில் டாக்டர்கள், நர்சுகள், மருந்தாளுனர்கள் உள்பட ஏராளமானவர்கள்

கவுரவிக்கப்பட்டனர்.

வாழ்நாள் சாதனையாளர் விருது 23 டாக்டர்களுக்கு டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத் வழங்கினார். விருது பெற்றவர்கள் பெயர் விவரம் வருமாறு:–

டாக்டர்கள் 1. அலமேலு வெங்கட்ராமன், 2. எம்.சந்திரமோகன், 3. எம்.வி.டேனியல், 4. டி.துரைராஜன், 5. கேப்டன் ஏ.கணேசன், 6. ஜெயராமன், 7. ஜெகதீசன், 8. ஜான் வசீகரன், 9. எஸ்.கல்யாணராமன், 10. சி.வி.கிருஷ்ணசாமி, 11. லட்சுமி நாராயணன் ,12. லலிதா அனந்த சுப்பிரமணியன், 13. யு.எஸ்.நாயக், 14. எம்.ராஜகோபால், 15. ரெஜினால்டு, 16. ரோசலின், 17. ஜே.ஜி.சண்முகநாதன், 18. எஸ்.சிவகுமார், 19. பி.சவுந்தரராஜன், 20. எஸ்.சவுந்தரபாண்டியன், 21. பேராசிரியர் கே.சீனிவாசன் (பிரபல நரம்பியல் நிபுணர்), 22. கே.சுவாமிநாதன், 23. வெம்பார்.

டாக்டர் கனகசபை, டாக்டர் ஷீலா கிரேஸ்

இதைத்தொடர்ந்து சிறந்த மருத்துவ நிர்வாகிகளாக சென்னை மருத்துவ கல்லூரி டீன் டாக்டர் வி.கனகசபை, டாக்டர் மேத்யூ ஜார்ஜ், மருத்துவ தேர்வுக்குழு செயலாளர் டாக்டர் ஷீலா கிரேஸ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் சுதா சேஷய்யன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த ஆசிரியர் விருது

33 டாக்டர்களுக்கு சிறந்த ஆசிரியர் விருதுகளை சிறப்பு அழைப்பாளர் குழந்தைகள் நல மருத்துவ ஆராய்ச்சி மைய தலைவரும், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை ஆலோசகருமான டாக்டர் மாதங்கி ராமகிருஷ்ணன் வழங்கினார்.

விருது பெற்றவர்கள் விவரம் வருமாறு:–

டாக்டர்கள் அன்புமணி, அந்தோணி டேவிட் தேவதாஸ், அஸ்வத் நாராயணன், பாலமுருகன், சந்திரமோகன், தெய்வநாயகம், தீபக் தாவூத் கபீர், எஸ்.இளங்கோவன், எழிலரசன், கீதா சுப்பிரமணியம், கன்னியாகுமாரி, கலாவதி பொன்னிறைவன், மஹாலி, மோகன், முத்துக்குமரன், மனோகர், நவநீதன், பழனி, பிரக்னா டோலியா, ராஜ வெங்கடேஷ், ராஜலட்சுமி, ராஜாமணி, ராஜாராம், ராஜரத்தினம், ராஜேந்திரன், சத்யா சுப்பிரமணியன், பி.சண்முகம், சோமசுந்தரம், தமிழ்மணி, துளசிராமன், வெள்ளைப்பாண்டியன், வசந்தா இளங்கோ, விஸ்வநாதராவ்.

பின்னர் விழா மலரை டாக்டர் பத்ரிநாத் வெளியிட்டார். அதை டாக்டர் மாதங்கி ராமகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த பல் மருத்துவருக்கான விருது டாக்டர் அஸ்வத் நாராயணனுக்கும், பார்மஸி பிரிவில் சிறந்த ஆசிரியர் விருது டாக்டர் வெற்றிச்செல்வனுக்கும், பிஸியோதெரபி பிரிவில் சிறந்த ஆசிரியர் விருது தேசிகாமணி, கிருஷ்ணசாமி, பெருமாள் ஆகியோருக்கும் கொடுக்கப்பட்டது.

நர்சு பிரிவில் சிறந்த ஆசிரியர் விருது எஸ்.அலிஸ் காந்திமதி, டாக்டர் அம்பிகா ரவீந்திரன், டாக்டர் கனகாம்புஜம், எஸ்.கனிமொழி, லட்சுமி, டாக்டர் லதா வெங்கடேஷ், பேராசிரியை ஜெயஸ்ரீ, ஆர்.கே.தேன்மொழி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

சமூகசேவை

சிறந்த சமூக சேவை செய்தவர்களுக்கான விருது எஸ்.டி.மார்க்கண்டேயன், நாராயணன் ஆகியோருக்கு கொடுக்கப்பட்டது.

தமிழில் மருத்துவ நூல்கள் எழுதிய டாக்டர்கள் இளங்கோவன், கோ.ராமநாதன், இளங்கோவன், ராஜா வெங்கடேஷ், கீதா சுப்பிரமணியம், என்.பார்த்தசாரதி, என்.மோகன்தாஸ் ஆகியோருக்கு விருது வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

இதுதவிர தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக ஊழியர்கள், அலுவலர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

மேலும் விழாவையொட்டி பல்கலைக்கழக அலுவலர்கள், ஊழியர்களுக்கு பல்வேறு போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

துணைவேந்தர் டாக்டர் மயில்வாகனன் நடராஜன் பேசியதாவது:—

மருத்துவத்துறையில் சிறந்த சேவை செய்த ஆசிரியர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு விருது வழங்கப்படுகிறது. கொடுக்கும் விருதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொருவரின் திறமையும், சேவையும் மதிக்கப்பட வேண்டும். இந்தியாவில் மருத்துவ படிப்பில் பாடத்திட்டம் (கரிக்குலம்) மாற்றப்படாமல் இருந்தது. ஆனால் அது இப்போது இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப நவீனப்படுத்தப்பட்டு மாற்றப்பட்டுள்ளது. தேர்வு முறையிலும் பல மாற்றங்களை கொண்டுவந்துள்ளோம்.

இவ்வாறு டாக்டர் மயில்வாகனன் நடராஜன் பேசினார்.

மாணவர்கள் டீன் டாக்டர் கே.மகேஸ்வரி நன்றி கூறினார்.